DINAKARAN 24 JAN 09

## சுவிட்சர்லாந்தில் நடக்கும்

# பொருளாதார கூட்டத்தில் ஜக்கி வாசுதேவ் பங்கேற்பு

சென்னை, ஜன.24: உலகப் பொருளாதார மையக் கூட்டத்தில் ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் உரையாற்றுகிறார்.



உலகப் பொருளாதார மைய கூட்டத் தொடர், சுவிட்சர்லாந்தில் வரும் 28ம் தேதி முதல் பிப்ரவரி 1ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் 40 நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள், தூதரக அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், மத தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள், 1,178 முன்னணி தொழில் நிறுவன பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இதில் கோவை ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் உரையாற்ற உள்ளார். இது குறித்து ஜக்கி வாசுதேவ் கூறுகையில், ''மனித குல நன்மைக்கு செயல் திட்டங்கள் உருவாக்குவது பற்றிய கருத்துக்களையும் உள்நிலை விஞ்ஞானம் பற்றியும் கூட்டத்தில் விளக்குவேன்'' என்றார்.